செய்தித்தாள் காகிதம்

* 363 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குத் தேவையான ' நியூஸ் பிரிண்ட் ' பேப்பரில் தன்னிறைவு பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு உரிம ஆண்டுக்கும் அறிவிக்கப்படும் செய்தித்தாள் காகிதப் பங்கீட்டுக்கொள்கையின் அடிப்படையில் செய்தித்தாள் காகிதம் வெளியீடுகள் வாரியாக நாடு முழுவதும் பங்கிடப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் உள்ள 'நேபா மில்ஸ் லிமிடெட்' ஒன்றுதான் இந்நாட்டில் செய்தித்தாள் உற்பத்தி செய்யும் ஆலையாகும். பெரும்பகுதி செய்தித்தாள் காகிதம் இறக்குமதி செய்யப்படுகிறது. எனவே, தமிழகத்தின் சுயதேவைப் பூர்த்தி என்ற வினா எழாது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கு நியூஸ் பிரிண்ட் காகிதம் ஆண்டுதோறும் எவ்வளவு தேவை என்பதையும், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு எவ்வளவு ஒதுக்குகிறது என்பதையும் அறிவிக்க இயலுமா என்பதையும், தஞ்சை மாவட்டத்தில் வைக்கோல், மூங்கில் போன்றவை அதிகமாகக் கிடைப்பதால், அங்கே மாயவரத்தில் இல்லாவிட்டாலும் தஞ்சையிலாவது அத்தகைய காகிதத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்திய நாட்டிற்குத் தேவைப்படும் காகிதத்திலேயே 70 சதவிகிதம் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகத்தான் குறிப்பு இருக்கிறது. நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில், வெளிநாட்டிலிருந்து 1967-68-இல் 2,104 டன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே சன் பேப்பர் ஆலையில் 15,000 டன் பேப்பர், நியூஸ் பிரிண்டை ஒத்த பேப்பரை செய்யும் முயற்சி நடைபெறுகிறது.

1972 மார்ச் 8]

திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, மெஸ்தா என்பதி லிருந்து நல்ல காகிதம் செய்ய முடியுமென்று சொல்லப்படுகிறது. அதைத் தமிழகத்திலே அதிகமான அளவிற்கு மூலப் பொருளாக உபயோகித்து இப்படிப்பட்ட பத்திரிகைக் காகிதத்தைச் செய்யும் ஆலையை பொதுத்துறையிலே நிறுவ இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புளிச்சகீரையிலிருந்து தயார் செய்வதைப்பற்றி நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் ஆராய்ச்சி செய்து, சன் பேப்பர் ஆலையிலே பேப்பர் உற்பத்தி செய்யப் பயன்படுத்த முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள். அதையொட்டிக் கூட்டுறவுத் துறையின் சார்பிலே இதைப் போன்ற தொழிற்சாலைபற்றி கன்சல்டண்ட் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த சன் பேப்பர் ஆலைக்குக் கன்னியாகுமரி காடுகளிலிருந்து மூங்கில் போன்றவைகள் மலிவாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி காட்டிலாக்கா அமைச்சரவர்களைக் கேட்க வேண்டும். சன் பேப்பர் ஆலையைப் பொறுத்தவரையில் ரீடாரீட்சை ரா மெட்டீரியலாக அதிகமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த நியூஸ் பிரிண்ட் பேப்பர் அதிகமாக வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யும் நிலையிலே, தமிழகத்திலேயே உற்பத்தி செய்யவோ அல்லது ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளில் அதிகமான உற்பத்தி செய்யவோ அல்லது புதிதாகத் தொழிற்சாலைகள் அமைக்கவோ செயற்குறிப்பு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைப்பற்றி நான் இப்பொழுது கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களிடத்திலே பேசிக் கொண்டிருந்தேன். கிரைண்டிங் மெஷின் உள்ள இடத்தில்தான் நியூஸ் பிரிண்ட் பேப்பர் உற்பத்தி செய்ய முடியுமென்று சொல்கி றார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட முடியுமென்பது யோசிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

[1972 மார்ச் 8

திரு. சோ. அழகர்சாமி : காகிதம் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் ஆராய்ச்சியின் பயனாக கோவில்பட்டி, சங்கரன்கோவில் போன்ற இடங்களில் விளையும் அகத்தியிலிருந்து காகிதம் செய்யலாம் என்று சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே கூட்டுறவுத் துறையில் இப்படி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு முயற்சி செய்தால் மூலப் பொருளான அகத்தி அங்கு ஏராளமாகக் கிடைப்பதால் அப்படி ஒரு தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மெஸ்தா ஃபைபர் அதிகமாக உள்ள என்னென்ன செடிகள் ராமெட்டீரியல்லாக உபயோகப் படும் என்று யோசித்தோம். அதில் இந்த புளிச்ச கீரையில் ஓரளவுக்கு வெற்றி கண்டு ஸன் பேப்பர் ஆலையில் நிரூபித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. வயபிள் யூனிட்டாகச் செய்ய ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அகத்தி அல்லது வேறு விதமான செடிகளைப் பயன்படுத்த முடியுமா என்பதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பருத்திமாறில் காகிதம் செய்யலாம் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே பருத்தி மாறு கோவையில் அதிகமாக இருப்பதால் அங்கு அதைக் கொண்டு ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீளமான ஃபைபர் எந்தெந்தச் செடிகளில் இருக்கிறதோ அதைப் பயன்படுத்த முடியும் என்பது பொதுவான ஒரு உண்மை. ஆனால் ஒரு குறிப் பிட்ட செடியை மட்டும் நம்பி தொழிற்சாலை ஆரம்பிக்க முடியுமா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. பருத்திச் செடியிலிருந்து வருமா என்பதுபற்றித் தனி ஆராய்ச்சி வேண்டும்.

திரு. கு. காமாட்சி : காகிதத்தின் முக்கியத்துவத்தை உணராமல் சில ஆசிரியர்கள், சில பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஏதேதோ கண்டவிதமான புத்தகங்களை எல்லாம் போடுகிறார்கள். தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒத்துவராத புத்தகங்கள் எல்லாம் இன்று அச்சிடப்படுகிறது. ஆகவே அவைகளை எல்லாம் தடைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?

1972 மார்ச் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எழுத்தையும் பேச்சையும் தடைப்படுத்துவதால் எதுவும் நின்றுவிடாது. இது காகித உற்பத்தி பற்றிய பிரச்னை. புத்தக உற்பத்தி பற்றிய பிரச்னை அல்ல.

ஜலகண்டாபுரத்துக்கு தொழிற்பேட்டை

* 364 **வின—திரு. எம் சுரேந்திரன்** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா ஜலகண்டாபுரத்தில் தொழிற் பேட்டை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

பஞ்சு இறக்குமதி

* 365 **வின—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு பேல் பஞ்சு இறக்குமதி செய்யப் படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் சுமார் 10.2 லட்சம் பேல்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வெளிநாட்டிலிருந்து சில ஆண்டுகளாக நூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு இறக்குமதியாகிறது என்ற செய்தியை நான் பார்த்தேன். இப்போது தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டில் இருந்தும் வட நாட்டிலிருந்தும் பஞ்சு வந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பலஇடங்களில் நீள இழைப் பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்யப்படுகிற இடங்களில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் ஏக்கரேஜை அதிகப்படுத்தாவிட்டாலும் உற்பத்தியையாவது அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?